6. அரசினர் தீர்மானங்கள்

(அ) திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஏழு பேர் மீதான உரிமை மீறல் பிரச்சினையில் அவை உரிமைக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற, திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியைச் சார்ந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் திரு. எஸ். அம்பேத்குமார், திரு. கே.எஸ். மஸ்தான், திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், திரு. என். சுரேஷ் ராஜன், திரு. க. கார்த்திகேயன், திரு. பி. முருகன் மற்றும் திரு. கு.க. செல்வம் ஆகியோர் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கையினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஆ)-ன்கீழ் இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற தி.மு.க உறுப்பினர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஈ)-ன்கீழ் இப்பேரவை ஏற்றுக்கொள்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். (குறுக்கீடுகள்)